PR No 950 26/11/2018

# பத்திரிக்கை செய்தி

போக்குவரத்து ஆணையர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர்கள், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகியோர்களின் அறிவுரைகளின்படி அக்டோபர் 2018-ம் மாதத்தில், துணைப் போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர் சரகத்திற்கு உட்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் இயக்கூர்தி ஆய்வாளர்கள் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து வகை வாகனங்களில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக சிறப்பு தணிக்கைகள் செய்யப்பட்டன.

அக்டோபர் 2018-ம் மாதம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட இந்த தணிக்கையின்போது மொத்தம் 7165 வாகனங்கள் தணிக்கை செய்யப்பட்டன. இதில் **1298** வாகனங்களுக்கு தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டன. இணக்கக்கட்டணம் **ரூ.14,42,150/-** வசூலிக்கப்பட்டது. வசூலிக்கப்பட வேண்டிய இணக்க கட்டணமாக **ரூ.16,71,400/-** நிர்ணயிக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு முறையாக வரி கட்டாமல் இயக்கப்பட்ட சரக்கு வாகனங்கள், ஆம்னி பேருந்துகள், மேக்ஸிகேப், ஜே.சி.பி. வாகனங்கள் மற்றும் கார்களிடமிருந்து தமிழ்நாட்டிற்கான சாலை வரியாக **ரூ.6,74,334/-** வசூலிக்கப்பட்டது. அதிக ஆட்களை ஏற்றிச் சென்ற **100** வாகனங்கள் மீதும், ஓட்டுநர் உரிமம் இல்லாத **335** வாகனங்களின் மீதும், காப்புச் சான்று இல்லாத **227** வாகனங்கள் மீதும், கண் கூசும் முகப்பு விளக்கு பொருத்திய **166** வாகனங்களின் மீதும், ஒளிரும் சிவப்பு பிரதிபலிப்பு நாடா இல்லாத **111** வாகனங்களின் மீதும், தகுதிச் சான்று இல்லாத **75** அனைத்து வகை வாகனங்களுக்கும் தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் பல்வேறு குற்றங்களுக்காக **174** வாகனங்கள் சிறை பிடிக்கப்பட்டுள்ளன.

மேலும், தஞ்சாவூர் சரகத்தில் அக்டோபர் 2018 மாதத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்பாக, அதிவேகமாக வாகனங்கள் ஓட்டி சென்ற 29 வாகன ஓட்டிகளுக்கும், குடிபோதையில் வாகனங்கள் இயக்கிய 1 வாகன ஓட்டிக்கும், தலை கவசம் அணியாமல் இயக்கிய 140 வாகன ஓட்டிகளுக்கும், கைபேசியில் பேசியபடி வாகனங்கள் இயக்கிய 7 வாகன ஓட்டிகளுக்கும், சீட் பெல்ட் அணியாமல் வாகனங்கள் இயக்கிய 184 வாகன ஓட்டிகளுக்கும் மற்றும் அதிக எடை ஏற்றி இயக்கிய 130 வாகன ஓட்டிகளுக்கும் தணிக்கை அறிக்கைகள் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது இரு சக்கர வாகனங்கள் அடிக்கடி விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டு வருவதால் தலை கவசம் அணியாத ஓட்டுநர்கள் மற்றும் பின்புறம் அமர்ந்து செல்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்கப்படுகிறது. மத்திய மோட்டார் வாகன சட்டம் 50 & 51 இன் படி வாகனங்களின் பதிவு எண் அரசு நிர்ணயித்த அளவுகளில் பதிவு எண்கள் (Registration Number) எழுதப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

போக்குவரத்து துறையில் ஓட்டுநர் உரிமம் சேவை சம்பந்தமாக பொது மக்களுக்கு அலுவலகத்தில் செலுத்த வேண்டிய தொகையை தேவையற்ற நேர விரயத்தை தவிர்க்கும்பொருட்டு தங்கள் வீட்டிலிருந்தவாறே கணினி மூலம் (பணமில்லாபரிவர்த்தனை) இணையதளம் வழியாக மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. http://parivahan.gov.in/sarathiservicecov6/sarathiHomePublic.do என்ற இணைய தளத்தினை பயன்படுத்தி கட்டணத்தை செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

26/11/18

துணைப் போக்குவரத்து ஆணையர்,
தஞ்சாவூர் சரகம்.